# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2116/43 - 2019 මාර්තු මස 27 වැනි බදාදා - 2019.03.27

*2116/43 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பி 21/78* (xv).

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

27 (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ஏ. இபதுல் றவூப் ஹக்கீம் ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மேல், மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக் கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றாகக் கருதப்படுகின்ற இலங்கை, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வளாகங்களையும் துறைகளையும் குறித்துரைக்கின்றதான, (2017, யூன் 14 ஆந் திகதிய 2023/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளை மூலம் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான) 2007, ஒற்றோபர் 09 ஆந் திகதிய 1518/15 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைக்கான அட்டவணையை, அவ்வட்டவணையின் நிரல் I இல் காணப்படுகின்ற “கலைப் பீடம்” என்னும் விடயத்துக்கு நேரொத்ததாகவுள்ள அட்டவணையின் நிரல் II இல் காணப்படுகின்ற “16. சட்டத் துறை” என்னும் பதிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.

“17. ஆங்கில மொழி கற்பித்தல் துறை

18. ஊடகக் கற்கைகள் துறை”.

ஏ. இபதுல் றவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும்
உயர் கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2019, மாச்சு 21.

04-344


1A - PG 4449 — 518 (2019/03) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.